# தமிழ் ஆழி



தொகுப்பாசிரியர்

முனைவர் ம.சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி.

# தமிழ் ஆழி

முனைவர் க. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

8) 42

தொகுப்பாசிரியர்

முனைவர் ம. சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

பொள்ளாச்சி.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41–பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை– 600 050.

☎: 044 - 26251968, 26258410, 48601884

Language: Tamil

**Tamil Azhi**

Compiled by: Dr. M. Chitrakala

Tamil Department

Nallamuthu Gounder Mahalingam College Pollachi.

First Edition : September, 2020

Copyright : Publisher

No.of Pages : 228

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 234 - 4010 - 1

Code No. A 4363

**₹ 300/-**

**Branches**

**Ambattur (H.O.)** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**தமிழ் ஆழி**

தொகுப்பாசிரியர்: முனைவர் ம. சித்ரகலா

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

முதல் பதிப்பு : செப்டம்பர், 2020

*அச்சிட்டோர்:* **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,**

*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*

**☎: 044 - 28482441**

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

## III. உரைநடை


1. பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் மானுட வாழ்வியல் சிந்தனைகள் — 4
   - முனைவர் பொ.மா.பழனிசாமி

2. அரசியற் சுதந்திரமும், இலங்கையின் கல்வி வளர்ச்சியும் — 5
   - திலானி (இலங்கை)

3. சங்க இலக்கியத்தில் தொழில்முறைகள் — 5
   - முனைவர் இரா.விஷ்ணுப்ரியா

4. கவிதை வடிக்கும் கவிதைகள் — 6
   - முனைவர் ப.வடிவேல்

5. உலகநாதன் ஓதுவித்த வாசகம் — 7
   - முனைவர் க.தனலட்சுமி

6. சிலப்பதிகாரத்தில் செவ்வியல் பண்புகள் — 7
   - முனைவர் ம.சித்ரகலா

7. சேக்கிழாரின் பெயர் சுட்டாப் பெண்கள் — 8
   - முனைவர் ஆ.மகாலட்சுமி

8. தூது செல்லாயோ கிளியே! — 9
   - முனைவர் பே.மகேஸ்வரி

9. நாட்டுப்புறவியலில் தொழில்சார் கலைகள் — 10
   - பேரா ர.சூர்யா

10. கவிஞர் சிற்பியின் தும்பைப் பூ மனிதர்கள் — 11
    - முனைவர் க.நஞ்சையன்


## IV. இலக்கிய வரலாறு


1. தமிழில் காப்பியங்களும் புராணங்களும் — 11
2. இரட்டைக் காப்பியங்களில் பெயர்ப் பொருத்தம் — 13


## V. படைப்பாக்கம்


1. புதினம் - சீத்தம்மா (நாவல்) — 13
   ஆசிரியர் - பட்சி
2. விளம்பரம் தயாரித்தல் - செய்தி எழுதுதல்

## 5. உலகநாதன் ஓதுவித்த வாசகம்

- முனைவர் க. தனலட்சுமி

வாழ்க்கையின் உன்னத இலட்சியமே வாழ்வாங்கு வாழ்தலே ஆகும். அப்படி வாழ்வதற்கு நீதிநெறி முறைகள் மிகவும் அவசியமாகின்றன. நமது தமிழ் நூல்கள் நீதிகளின் களஞ்சியங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. சங்க காலந்தொட்டு இக்காலம் வரை தமிழ் நூல்கள் காலந்தோறும் நீதிகளைப் பதிவு செய்து வருகின்றன. அந்த நீதிநூல்களுள் உலகநாதன் என்பவரால் எழுதப்பட்ட 'உலகநீதி' என்ற நூலின் ஒவ்வொரு வரிகளும் ஒரு வரிச் சட்டம்போல் நீதிக் கருத்துக்களை விளக்குகின்றன. இந்நூலின் முழுமையான கருத்துக்களை அறியவும் தெளியவும் வேண்டும் என்ற நோக்கத்தோடு இக்கட்டுரை கருத்துக்களை முன் வைக்கின்றது.

### கல்வியின் தொடக்கமும் பிற கருத்துக்களும்

உலகத்தையே மாற்றி அமைக்கும் பேராற்றல் கல்விக்கும் கற்றவர்க்கும் உண்டு. கல்வியின் மேன்மையை உணர்ந்த உலகநாதர் தினந்தோறும் கல்வி கற்க வேண்டும் என்று குறிப்பிடுவதை,

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்" (1)

என்ற முதல் பாடலால் அறியலாம். யார் மீதும் பழி சொல்லாது, தீயவர்களோடு இணைந்து தகாத இடங்களுக்குச் செல்லாமல் இருத்தல் வேண்டும் எனக் கூறும் இந்நூல், ஒருவர் இல்லாத பொழுது அவர்களைப் பற்றிக் குறைகூறக் கூடாது என்பதனையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஓதாமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது என்பதைப் போலவே மாதாவை ஒருநாளும் மறக்கக்கூடாது என்பதைப் பதிவு செய்துள்ளது. எதையெல்லாம் இவர் வேண்டாம் என்று கூறுகின்றாரோ அதனையே இந்த உலகம் தெளிவாகச் செய்வதை நாம் அறிவோம். இவ்வரிகள் ஒவ்வொன்றும் ஒரு நூலாக வெளியிடுகின்ற அளவிற்கு கருத்துள்ள வாசகம் என்பதை உணர்தல் வேண்டும்.

கல்வி, கற்பது என்பது இன்று கசப்பான விஷயமாக மாறிக் கொண்டு வருகின்றது. கற்றல்தான் இந்த உலகத்தின் ஆணிவேர், தேர்வுக்காக மட்டுமே நுனிப்புல் மேய்வதைப் போல பார்த்துவிட்டுச் செல்வதைவிட கற்று மனதில் பதியவைத்துச் செல்ல வேண்டும்.

'கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'

என்றும்

'கீழ்பாற் ஒருவன் கற்பின் மேற்பாலொருவன்
அவன் கற்படுமே'

என்ற சிறப்பிற்கும் தீர்வுகளுக்கும் கல்வி அடிப்படையாக விளங்குகின்றது. அதனால்தா... பேரறிஞர் பிளேட்டோ அவர்கள்,

"படிக்காமல் இருப்பதைவிட பிறக்காமல்
இருப்பதே மேல்"

என்று குறிப்பிட்டார். நமது இலக்கியங்களோ கல்வியின் இன்றியமையாமையை,

"இளமையில் கல்" - ஆத்திசூடி

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" - நறுந்தொகை

"கல்விக்கு அழகு கசடற மொழிதல்" - நறுந்தொகை

"எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீடு இருண்ட வீடு" - பாரதிதாசன்

என்று குறிப்பிடுகின்றன. அதுமட்டுமல்லாது கற்ற கல்வியை அடித்துச் செல்ல இயலா... வேந்தனாலும் அபகரிக்க இயலாது, கொடுக்கக் கொடுக்கக் குறையாது என்றும் ஓ... வயிற்றில் பிறந்தாலும் கற்றோனையே தாயும் விரும்புவாள் என்றும் இலக்கியங்க... கூறுகின்றன. அதனால் தான், "பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடா... என்று மகாத்மா குறிப்பிட்டார். காவல்துறை அதிகாரியாக விளங்கிய அ. கலியமூர்த்... அவர்கள், "செல்வந்தர்கள் மகாலெட்சுமியால் இந்த உலகத்தை ஆட்சி செய்தால் ஏழைக... சரசுவதியால் ஆள முடியும். பணக்காரர்கள் வீட்டில் பிறக்கும் குழந்தைகளின் பாதங்களை... தாங்கப் பலர் இருக்கிறார்கள். ஆனால் ஏழைக் குழந்தைகளின் தோள்கூட சுமைகளை... தாங்க வேண்டியிருக்கின்றது. பணக்காரர்கள் வீட்டில் பிள்ளைகள் வளர்ந்து பிறக்கிறார்க... ஏழைகள் வீட்டில் குழந்தைகள் பிறந்து வளர்கிறார்கள். வளர்ந்து பிறப்பது வாரிசுரிமை... பிறந்து வளர்வது பிறப்புரிமை, பிறப்புரிமைக்காகக் கல்வி கற்றுக் கொள்ளுங்கள், கல்விய... சாதிக்க முடியும் என்பதற்கு நானே உதாரணம்" என்று குறிப்பிட்டார். மேலும் உலகநீ... கற்றவரை பழிக்கக்கூடாது என்றும் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

## பொய்கூறேல்

மனதறிந்து பொய் சொல்லக்கூடாது என்று தொடங்கும் பாடல்

"நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒரு நாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்" (2)

என்று கூறுகின்றது. தெரிந்தே பொய்கூறக்கூடாது. நடக்காது என்ற காரியத்தை... நிலைநிறுத்த முயலக்கூடாது என்று கூறும் இப்பாடல் பொய்மையைப் புறந்தள்ள முதலி... முயலுவது குறிப்பிடத்தக்கது "இறந்தாலும் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்". (10: ...) என்றும் இவர் இயம்பியுள்ளார்.

### சினமானவை

*மனம் செல்கின்றபடி நாமும் செல்லக்கூடாது என்றும் பகைவனை உறவென்று நினைக்கக்கூடாது, செல்வத்தைக் கடின உழைப்பால் தேடி அதனைப் பயன்படுத்தாமல் வைத்திருக்கக்கூடாது, தருமத்தை மறக்கக்கூடாது என்று கூறும் நூல்,*

"சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேற வேண்டாம்
மனம்தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே" (3)

*என்றும்*

"முன்கோபக்காரரோடு இணங்க வேண்டாம்" (6: 4)

*என்றும் கூறுகின்றனர். அதனால்தான் வள்ளுவரும்,*

"இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத் (310)
துறந்தார் துறந்தார் துணை"

*என்று சினத்தில் அளவு கடந்து செல்பவர் இறந்தவரைப் போன்றவர், சினத்தை அடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பானவர் என்று கூறுகின்றார்.*

### ஒருநாளும் செய்ய வேண்டாதவை

*வாழ்க்கையில் எதையெல்லாம் செய்யக்கூடாதோ அவற்றையெல்லாம் உலகநாதன் பட்டியலிடுகிறார். அதே நேரத்தில் ஒருநாளும் செய்யக்கூடாது என்று சில வரிகளைச் சுட்டிக் காட்டுகின்றார். அவற்றைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும். அதனைத் தவிர்த்து விட்டு செயல்பட முடியாது என்பதனையே அவ்வரிகள் உணர்த்துகின்றன.*

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" (1: 1)
"மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்" (1: 3)
"நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்" (2: 3)
"அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம் (2: 6)
"தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்" (3: 4)
"கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்" (4: 3)
"கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்" (7: 2)
(கணக்கழிவு - நடந்து முடிந்தது)
"பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்" (7: 4)
"இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்" (7: 5)
"செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்" (8: 2)
"தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்" (10: 8)

*என்ற வரிகளை என்றும் நாம் மறத்தல் கூடாது.*

### பெண்கள் தொடர்பானவை

*தாயை என்றும் மறக்கக்கூடாது எனக் கூறும் உலகநாதர்,*

"கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்" (4: 3)

என்று குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தை அடியொட்டியே இவ்வரியை அனு வேண்டியுள்ளது. களவு என்பதைத் திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை என்றும் கற்பு என்பதைத் திருமணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை என்றும் தொல்காப்பியம் குறிப்பிடு இங்குக் கற்புடைய மங்கையர் என்பது திருமணமான பெண்களையே குறிக்கும். திருமணமா அடுத்தவரின் மனைவியை மனதில் கூட நினைக்கக் கூடாது என்பது இந்நூலின் கருத்தாகு உன்னுடைய குழந்தையும் என்னுடைய குழந்தையும் நம்முடைய குழந்தையோடு விளையாடுகின்றன என்பது கொறட்டை விட்டால் கூட விவாகரத்து செய்கின் வெளிநாட்டவருக்கு வேண்டுமானால் பொருந்தும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ் ஒழுக்கமான வாழ்வு மட்டுமல்ல; அது உன்னதமான வாழ்வும் கூட என்பதை நாம் உணர்த வேண்டும். அதனால்தான்.

"இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்" (7: 5)

என்று உலகநாதர் குறிப்பிடுகிறார். மேலும்

வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்
"வாழாமல் பெண்ணை வைத்துத் திரியவேண்டாம்" (5: 1-2)
மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டாம்

என்ற வரிகளும் பெண்கள் பற்றிய சிந்தனைகளை முன்வைக்கின்றன. மனைவியோடு வாழாமல் பிற பெண்களைத் தேடி அலையக்கூடாது. மனைவியைக் குறை கூறக் கூடாது என்ற அர்த்தமுள்ள வாசகங்களை மனதில் நிறுத்த வேண்டும்

புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் காந்தியின் பேத்தி கலந்து உரையாற்றியதை தினமண பத்திரிகை வெளியிட்டிருந்தது. தனது தாத்தா தனக்கு எழுதிய கடிதங்கள் பற்றி செய்திகளை அதில் எடுத்துரைத்தார். "நான் என் மனைவியை அடக்கி குறை சொல்வதை நோக்கமாகக் கொண்டிருந்தேன். எனது மனைவி மிகுந்த சகிப்புத் தன்மை உடையவ அவள் எனக்குக் கற்றுக் கொடுத்த சகிப்புத் தன்மைதான் பிற்காலத்தில் என்னை மகாத்மாவாக மாற்றியது என்று குறிப்பிட்டாராம்." சகிப்புத்தன்மையோடு மனை இருப்பாள் என்பது ஒருபுறம் இருந்தாலும் 'மண்ணில் எவ்வுயிரும் தெய்வமென்றா மனையாளும் தெய்வமன்றோ' என்பதை உணர்ந்து பிழைக்காமல் வாழ்தலே இனிதாகும்

## பிறருக்குச் செய்ய வேண்டாதவை

நாம் எப்படியெல்லாம் இருக்கக்கூடாது எனக் கூறும் உலகநாதர், பிறருக் என்னவெல்லாம் செய்யக்கூடாது என்பதையும் எடுத்து இயம்புகிறார்.

"ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்" (1: 2)

என்ற வரியில் பொல்லாங்கு என்பது 'பழி' என்ற பொருளில் கையாளப்பட்டுள்ளது. ஒருவ மீதும் பழி சொல்லக் கூடாது என்று கூறுவது பொருந்துமா? என்ற கேள்விக்கு பழிச் செய செய்தவர்கள் மீது பழிச்சொல் சொல்லித்தானே ஆக வேண்டும் என்று பதில் பிறக்கிற ஆனால் பிறரிடம் குறைகளைக் கண்டு பழி சொல்லும் பொழுது நம்முடைய மனமு அவர்கள் செய்த செயலால் வருந்துகின்றது. உடல் பலமும் குறைகின்றது. ஒருவகையி யார் மீதும் குறைகூறாது இருத்தலே பொருத்தமாகும்.

"போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்" (1: 6)
"அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்" (2: 6)
"தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்" (5: 6)
"எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்" (7: 6)

என்ற வரிகள் பொருளாலும் பதவியாலும் பலத்தாலும் தனக்குக் கீழ் இருப்பவன குறைகூறக் கூடாது என்று கூறுகின்றது.

## இறைச் சிந்தனை

ஒவ்வொரு பாடல்களும் எட்டு வரிகளைக் கொண்டு விளங்கும் இந்நூல் விநாயகர் வாழ்த்தோடு 13 பாடல்களை உடையதாக விளங்குகின்றது. ஒவ்வொரு பாடல்களின் இறுதி இரண்டு வரிகள் முருகனையே குறிப்பிடுகின்றன.

"வாகாரும் குறவருடைய வள்ளி பாங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே" (I: 7. 8)

என்று முருகனை முன்வைத்துப் பாடப்பட்டுள்ளது. மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் என்ற வரி முதல் ஐந்து பாடல்களிலும் எட்டு, ஒன்பது மற்றும் பன்னிரண்டாவது பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன. தெய்வானையின் கணவனாக முருகனைக் குறிப்பிடாமல் வள்ளியின் கணவனாகவே குறிப்பிட்டுள்ளார். உமையவளின் மகன் என்று ஓரிடத்தில் மட்டுமே வருகின்றது. உலகநாதர் மரபு கருதி விநாயகரை வழிபட்டுத் தொடங்கினாலும் அவர் ஒரு முருக பக்தர் என்பதைத் தெளிவாக உணர முடிகின்றது.

மேலும் முருகனைப் பாடுவதற்காகவே நூல் எழுதப்பட்டது என்பதை இறுதிப்பாடல்,

"ஆதரித்துப் பாவகையால் பொருளும் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாடவேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந்தேடி
பூலோகம் உள்ளளவும் வாழ்வார் தாமே" (13: 1-8)

என்று கூறுகின்றது. இதனை நாமும் கடைப்பிடித்து நல்ல நீதிக் கருத்துக்களை உலகத்திற்கே முன்வைத்து உலகநாயகனாகிய உலகநாதனின் கருத்துக்களைப் பின்பற்றுவோம்! தமிழ் இலக்கியங்கள் தமிழரை மட்டும் நினைவில் வைத்துப் பாடாமல் உலகத்தையே நோக்கமாகக் கொண்டு பாடக்கூடியன என்பதைத் தெளிந்து செம்மாறத் தமிழ் இலக்கியங்களைச் சிரமேல் கொண்டு செயலாற்றுவோம்.